DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
-----
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1, ATTUR.

| | | | |
|---|---|---|---|
| Calendar | .. .. **CC. 140/2023** | | |
| Deposition of Witness for | PW 4<br>Prosecution<br>Court | | |
| Name | : திருமதி.ஜெயசுதா | | : |
| Father/Husband Name | : க.பெ. திரு.சம்பத்குமார் | Calling | : மருத்துவர் |
| Village | : கள்ளக்குறிச்சி | | : |
| Taluk | : கள்ளக்குறிச்சி | Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 20.05.2025

**சாட்சி முன்னிலை. உறுதிமொழி எடுக்கப்பட்டது. முதல் விசாரணை**

துவக்க நேரம் 12.33

1. நான் தற்பொழுது, கள்ளக்குறிச்சி அரசு மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 14.09.2022 அன்று பெத்தநாயக்கன்பாளையம் அரசு மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணியில் இருந்தபொழுது, அன்று மாலை 05.10 மணியளவில் நான் பெத்தநாயக்கன்பாளையம் அரசு மருத்துவமனையில் அவசர சிகிச்சை பிரிவில் பணியில் இருந்தேன்.

2. அப்பொழுது, திரு.அழகுதுரை,த.பெ முத்துசாமி என்பவர் சிகிச்சைக்காக வந்தார். அவருக்கு வலது கை பெருவிரல், இடது காது, இடது கால் ஆகிய இடங்களில் இரத்தகாயங்களுடன் வந்தவரை, நான் விசாரித்தேன். அப்பொழுது அவர் அன்று மாலை 03.00 மணியளவில் எனது வீட்டிற்கு அருகில் தன்னை தெரிந்த 2 நபர்கள் கட்டை மற்றும் கத்தியால் தாக்கியதாக கூறினார். மேலும், அவரை பரிசோதிக்க அவருக்கு வலது கை பெருவிரல், இடது காது, இடது கால் ஆகிய இடங்களில் இரத்தகாயங்கள் இருந்தன.

அவருக்கு பின்வரும் காயங்கள் காணப்பட்டன.

3. i) 0.5x0.5x0.5 செ.மீ அளவில், இடது காதில் கிழிந்த காயம் இருந்தது.

ii) 0.5x0.5x0.5 செ.மீ அளவில் இடது காலிலும் கிழிந்த காயம் இருந்தது.

Iii) 0.5x0.5x0.5 செ.மீ அளவில், வலது கை பெருவிரலிலும் கிழிந்த காயம் மற்றும் வீக்கம் இருந்தன. மேலும், வலது கை பெருவிரல் சிறிது வளைந்து காணப்பட்டது.

அவரை உள்நோயாளியாக அனுமதித்து சிகிச்சை அளித்தேன். அவருக்கு வலது கை பெருவிரல் சிறிது வளைந்து காணப்பட்டதால், அவருக்கு நுண்கதிர் படம்

எடுப்பதற்காகவும், மேல் சிகிச்சைக்காகவும் சேலம், அரசு மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தேன்.

4) சேலம், அரசு மருத்துவமனையில் அழகுதுரைக்கு சிகிச்சையளித்த மருத்துவர் அழகுதுரைக்கு வலது கை பெருவிரலில் ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என்று கருத்துரை வழங்கினார். அவர் வழங்கிய கருத்துரையின் அடிப்படையில், அழகுதுரைக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என்று காயச்சான்று வழங்கினேன். (**அழகுதுரையின் விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று அ.த.சா.ஆ. 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. )** மேற்படி கட்டை மற்றும் கத்தியால் தாக்கினால் மேற்சொன்ன காயங்கள் ஏற்படும். வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

1) இவ்வழக்கில் அடிப்பட்டதாக சொல்லும் அழகுதுரைக்கு வயது 75 என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். காயம்பட்ட அழகுதுரை என்பவர் வயது முதிர்வின் காரணமா கீழே விழுந்திருந்தால், இடது காது, காலிலும் காயங்கள் ஏற்பட வாய்ப்புள்ளது என்றால் வாய்ப்புள்ளது.

2) அழகுதுரை நிலைதடுமாறி கீழே விழும்பொழுது, விரல் மடங்கி எலும்பு முறிவு காயம் ஏற்பட வாய்ப்புள்ளது என்றால் வாய்ப்புள்ளது.

**மறுவிசாரணை** - இல்லை

முடிவு நேரம் 12.48

Taken Down by me in Open Court Read over to the Dependant in the presence of the accused and admitted by the Dependant to be correct

Sd/-A.Anis Fathima.,
Judicial Magistrate No.1,
Attur.